எம்.சி.ஓ.பி எண்: 2414/2023 தேதி: 23.03.2026

எ,மசா. : 1

பெயர் : ஜெகதீசன்

த/பெ. : நரசிம்மன்

வயது : 41

**<u>சத்திய பிரமாணம் செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசராணை</u>**

நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் எ,மசாஆ 1 முதல் 5 வரை தாக்கல் செய்கிறேன். .

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எமசாஆ 3,5 ஆவணங்களின் படி விபத்திற்கு முழு காரணம் 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் கவனக்குறைவுதான் காரணம் என்றால் சரி. எங்கள் புலன் ஆய்வு அலுவலர் முதல் எதிர்மனுதாரரை விசாரித்தார். அவரிடம் வாக்குமூலம் ஆவணங்கள் வாங்கவில்லை. அவர் தரவில்லை. அவரை விசாரித்தது சம்பந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. 1ம் எதிர்மனுதாரருக்கு தெரியாமலே விபத்து வாகன ஓட்டுநர் வாகனத்தை எடுத்து சென்று விபத்தை ஏற்படுத்திவிட்டார் என்றால் சரியல்ல. மனுதாரருக்கு விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா இல்லையா என்பது தெரியாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மனுதாரர் 3 தரப்பினர். விபத்து சமயத்தில் நிறுவனத்தால் வழங்கப்பட்ட காப்பீடு நிலுவையில் உள்ளது. காப்பீடு நிலுவையில் இருந்ததால் 1ம் எதிர்மனுதாரர் சார்பாக 2ம் எதிர்மனுதாரர்தான் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.